Regd. No. M. 4593. "KUDI ARASU" 8 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி [illegible] மலை ரூ. 0-1-6
சிலோனில் ,, ரூ. 0-2-0

மாலை 17 } ஈரோடு, 29-7-1944 ஆடி-மீ 14உ { மலர் 42

ஓமலூர் தாலூகா திராவிட இளைஞர் மாநாடு

தோழர் ந. அர்ச்சுனன் சொற்பொழிவு

22-7-44 தேதி நீலகண்டபுரத்தில் நடைபெற்ற ஓமலூர்த் தாலூகாத் திராவிட இளைஞர் மாநாட்டுக்குத் தலைமை வகித்த தோழர் ந. அர்ச்சுனன் (இளைய குமார பட்டக்காரர்) அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் சில பகுதிகள்.

முரசு முழங்குது!

இதுபோது, எங்கு நோக்கினும், திராவிட இளைஞர்களின் மாநாடுகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. கிழமைதோறும் மாநாடுகள் கூடுகின்றன. ஆயிரக்கணக்கிலே இளைஞர்கள் கூடுகின்றனர். வீர உரைகள் ஆற்றுகின்றனர், விடுதலை ஆர்வத்தை ஊட்டுகின்றனர்! வீரக்கோலத்துடன் காட்சிதருகின்றனர். அஞ்சாநெஞ்சுடன் அவர்கள் ஆற்றும் அரிய தொண்டினைக் கண்டு நமது பெரியார் மகிழ்ச்சி அடைகிறார். ஒரு அரிய, திறமுள்ள முன்னணிப்படை இன்று தயாராகி விட்டது. கஷ்ட நஷ்டங்களைக் கவனியாமல், எதிர்ப்புக்கு அஞ்சாமல், சூது சூழ்ச்சிகள் கண்டு சோர்வடையாமல், சளைக்காது உழைக்க இளைஞர்கள் முன்வந்துள்ளனர். இதுகண்டு எதிரிகள், எங்கிருந்து புறப்பட்டது இப்புறப்படை, எப்படி அமைந்தது இந்த முன்னணி, என்று எண்ணி ஏங்குகின்றனர். நமக்கோ ஒரு தமிழ்த் தினசரியில்லை, நம்முடன் போரிடும் கட்சியினருக்கோ அழகிய ஆங்கிலத்தாட்கள் பல, தமிழ்ப்பத்திரிகைகள் ஏராளம்! நமக்கோ அமைப்பு முறை இல்லை. கிளைச்சங்கங்களும், அவைகளைத் தொடர்பாக்கும் சங்கிலிகளும், சுற்று அறிக்கைகளும், அவைகளை எடுத்துச் சொல்லும் தூதர்களும், தலைவரின் தாக்கீதுகளும், செயலாளரின் அறிக்கைகளும், இல்லை. என்றாலும், ஆர்வத்திற்கோ, எழுச்சிக்கோ, கிளர்ச்சிக்கோ, தங்கு தடையேனோ? ஏற்றும் எழுச்சி, அத் [illegible]

வாடை வீசிடக்காண்கிறோம். ஆதரவளிக்கப் பல பத்திரிகைகள் இன்றி, அமைப்பு முறையுமின்றி உள்ளபோதே, இத்துணை எழுச்சி இருந்திடக்காண்கிறோம்; அமைப்பு ஏற்பட்டுப் பல பத்திரிகைகள் பணியாற்றத் தொடங்கி, உட்பூசல் ஒழிந்து, உளவர்கள் வெளியே ஓட்டுக்கயவர்கள் சாய்ந்து போனால், பிறகு நமது இயக்க வேகம் எப்படித்தான் இருக்கும், எவ்வளவு பலமுள்ளதாகிவிடும் என்பதை எண்ணும்போதே



தோழர் ந. அர்ச்சுனன்

எனக்கு உண்டாவது போன்றே ஒவ்வொரு தோழருக்கும் பெருமகிழ்ச்சி பிறக்கும் என்று நினைக்கிறேன். அந்தக் காலம், விரைவில் வந்தே தீரும், வந்து கொண்டே இருக்கிறது என்றும் கூறுவேன்.

இன எழுச்சி

இத்துணை ஆர்வம், வாலிபரிடையே இன்று ஏற்பட்டிருப்பதும் இன எழுச்சியின் காரணத்தாலே தான். மங்கிவிட்டது கட்சி, ஒடுங்கிவிட்டனர் தலைவர்கள் என்று கூறி ஏங்கிக்கிடந்த தலைவர்கள் இப்போது ஆர்வம் தங்குதடையின்றிப் பொங்கி வழிவதைக் காணவேண்டும். இன எழுச்சியின் அறிகுறியே இது என்பதை உணரவேண்டும். எந்த இடத்திலும் இப்போது, ஆரியர் திராவிடர் என்ற பிரச்சினை பேசப்படுகிறது, ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன, சரித்திரம் திருத்தி எழுதப்பட்டு வருகிறது. தன்னை உணராமல் தவித்துக்கிடந்த திராவிட இனம் இன்று, நாணி ஆளுவோம் பரணிபாடுவீர் என்று முழக்கமிட்டுக் கொண்டு, முகாம் அமைத்து விட்டது. ஆரியம், இதுகாறும் வரை இழைத்த கொடுமைகள் அம்பலமாக்கப்பட்டு, அதன் சதிச்செயல்கள் வெளிப்பட்டுச் சந்திசிரிக்கும் நிலை இன்று ஏற்பட்டு விட்டது.

தன்னுணர்வு பெற்ற தமிழன் மூட்டிவிடும் தீயிலே, சனாதனச் சர்ப்பங்கள் வெந்து மடிந்து தீரும், பார்ப்பனீயம் எனும் மலைப்பாம்புகள், உருண்டு புரண்டு, கருகித்தான் தீரும்.

நீதியும் சதியும்

திராவிடத் திருநாட்டிலே ஆரிய அரசு அமைந்ததால், இதுவரையில் நமது பெரியவர்கள், அந்த அரசுக்கு அடங்கிஇருந்து கொண்டே நீதி கேட்டு, சிந்தனையே பெற்றுவர நேரிட்டது. கோயிலிலே அநீதி, குலத்தருகே கொடுமை! ஊர்களிலே பிரிவுகள்! மதத்திலே மமதை! கலையிலே ஆரிய வலை, மதத்தாசரின் தொல்லையும் ஒழியவில்லை, ஆரிய ஆணவமும் அழியவில்லை, அணுவளவும் சமுதாயம் சீர்திருந்தவில்லை, நமக்குக் கிடைத்த நீதியெல்லாம், நம்மிலே சிலருக்குப் பட்டம் பதவிகள், அதிகாரமற்ற பதவிகள், அனுபவிக்கமட்டுமே சுவையுள்ள ஆனால் பல நற்காரியங்களைச் செய்ய வழியில்லாத பதவிகள் கிடைத்தன. அத்துடன், முளைத்தது பதவிக்காக நமக்குள் சண்டைகள், சதிகள், சூழ்ச்சிகள்; பதவிப் பித்தர்கள், ஏகாதிபத்திய ஏவலர் என்று எதிரிகள் தூற்றிய வசை மொழிகள், விஷமப்பிரசாரத்துக்கு ஆளான பாமரரின் பகை எனும் இன்னோரன்ன தொல்லைகள் தொடர்ந்தனவேயன்றி, எந்த இன உயர்வுக்காக நீதி கோரினோமோ அது கிடைக்கவில்லை.

சட்டசபைகளிலே நம்மவர் சிலர் நாடாளும் நாயகர்களாக இருந்த அதே சமயம், தமிழரின் [illegible] ஆரியர் ஆண்டனர், [illegible]

யது போலாயிற்று. நாம் பெற்ற அரசியல் சலுகைகள், சமுதாயத்துக்குப் பயன் கோரிய முறையிலே கிடைக்கவில்லை. இந்தப் போலி வெற்றியே நம்மவரில் சிலரை, சகலமும் சித்தியாகி விட்டது என்று நம்பவைத்தது; இந்த மணல்மேடு, காங்கரசின் தேர்தல் பிரசாரம் எனும் பெருங்காற்றினால் அழிக்கப்பட்டது அக்காற்றும் அது கிளப்பிய தூசும், நம்மவரில் பலரை மிரட்சி அடையச் செய்தது; கோட்டைகளை விட்டு வாளைக் கீழே போட்டுவிட்டு ஓடினர் பலர். பெரியாரின் பெரும்படை, ஏற்றுக் கொண்டது, கோட்டையைக் காவல் புரியும் வேலையை. சத்திரத்திலும், சாவடியிலும், கோயிலிலும், குளத்திலும் அதிகாரம் செய்யும் ஆரியத்தை, மதத்திலும் கலையிலும் புகுந்துகொண்டு கொடுமை புரியும் ஆரியத்தை, வேதமோதியும் கீதமியற்றியும் கருத்தைக் கெடுக்கும் ஆரியத்தை, காணிக்கை பெற்றும் கதை கூறியும் காலந்தள்ளும் ஆரியத்தை, வீரனையும் கோழையாக்கி வீணரை வாழவைக்கும் ஆரியத்தை, ஒழிக்க, சட்டசபைகள் அல்ல முதற்களம்! என்ற உண்மையை உணர்ந்து, மக்கள் மனதிலே படிந்து கிடக்கும் மாசுதனைத் துடைக்கும் வேலையைச் செய்யலாயினர்.

படைகூடிவிட்டது செலுத்துகஎன்று கூறுகின்றனர். எங்கே? என்று கேட்கிறார் பெரியார். இது தெரியாதா? சட்டசபைகளை மீண்டும் கைப்பற்ற வேண்டாமோ, அதற்கேபோர், படையும் அதன் பொருட்டே என்கின்றனர். பெரியார் இதற்கல்ல இப்படை, இது தமிழரின் தனிப்பெரும் படை, தமிழரின் மானத்தை மீட்டுத் தரும்படை, ஆரியத்தை அழிக்கும் காரியத்தை வீரியத்தோடு ஆற்றவேண்டிய படை, திராவிடநாட்டை இந்தியப் பிணைப்பிலிருந்து வெட்டி, வடநாட்டு முதலாளிமார்களின் கொட்டத்தை மட்டந்தட்டி, திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்தின் பொருட்டுப் போரிட வேண்டிய படை, இப்படையினைக் கொண்டு, முன்னம் அடைந்தது போன்ற போலி வெற்றி அடைய வீணுக்கு உழைத்திட எனக்கு மனமில்லை, எனக்குத் தரவேண்டாம் இத்தொல்லை, சற்றே கேளுங்கள் என்சொல்லை, திராவிடநாடு தனி நாடாவது தான் இப்படை செல்லவேண்டிய எல்லை என்று கூறுகிறார். முத்தமிழிலே புதுமலர்ச்சி, மதத்தைப்பற்றிப் புதுக்கருத்து, இவைகள் இன்று நாட்டிலே எங்கும் பூத்திடக்காண்கிறோம். இந்தப்பாதை வழி சென்றால், திராவிட இனத்தின் இலட்சியம் கைகூட வழி இருக்கிறது. இனவழிசென்றால், பதவிகளிலே சில காலம் அமர வழி உண்டு, ஆனால், இன விடுதலைக்கு அதுவல்ல மார்க்கம்!

ரோஜா முத்தையா

நெல்லை மாவட்ட திராவிட மாநாடு

நிறைவேறிய தீர்மானங்கள்

தூத்துக்குடியில் ஜூலை 8, 9 தேதிகளில் தோழர் க. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) தலைமையில் நடைபெற்ற திருநெல்வேலி மாவட்ட திராவிட இளைஞர் மாநாட்டில், திராவிடநாடு தனியாக எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிறது என்றும் திராவிடத்தைத் தனியாகப் பிரித்தே தீருவார்கள் என்றும், கஸ்தூரிபாய் நிதிக்கு இயக்கப் பிரமுகர்களில் சிலர் பொருள் கொடுத்து உதவுவதையும் அந்தக் குழுவில் உறுப்பினராய் இருப்பதையும் கண்டிப்பதாயும், சென்னையில் பெரியாரின் உருவச் சிலையை நாட்டுவதற்கு நிதி திரட்டும்படி இயக்கத் தோழர்களைக் கேட்டுக்கொள்வதாகவும், இயக்கத்திற்கு பெருநிதி கண்டு, தினசரித்தாள் அமைத்து, திராவிட மண்டலமெங்கும் இளைஞர் கழகங்கள் காணவேண்டுமென்றும், நீதிக் கட்சியையும், தன்னுணர்வு இயக்கத்தையும் 'திராவிட கழகம்' எனப் பெயரிட்டு வெற்றிக்கான திட்டங்கள் வகுத்துத் தரவேண்டுமென்று பெரியாரைக் கேட்டுக்கொள்வதாகவும், மனுநீதி, கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற அறிவுக்கொவ்வாத நூல்களை மாநாட்டில் கொளுத்தியே தீருவதென்ற முடிவுக்கு வந்திருப்பதாகவும், கோவில், மடங்கள், சத்திரங்கள் ஆகியவைகளில் முடங்கிக்கிடக்கும் பணத்தை மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படும்படிச் செய்ய அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதாகவும், திராவிடர்களை இழிவுபடுத்தும் உணவு விடுதி, சத்திரம், கோவில் முதலியவைகளை இயக்கத்தோழர்கள் புறக்கணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் புரட்சிக்கவி பாரதிதாசன் கவிதைகளை பள்ளி மாணவர்களுடைய புத்தகங்களில் அதிகமாக சேர்க்கும்படி கேட்டுக்கொள்வதாகவும், பருவ மழையின்றி கார் வேளாண்மைக்கு தடையேற்பட்டு 35,000 டன் நெல் இம்மாவட்டத்தில் குறைவு ஏற்பட்டிருப்பதால் பாபநாசம் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரைத் திறந்து விடும்படி கேட்டுக்கொள்வதாகவும், நெல்லை மாவட்டத்தின் முக்கிய உற்பத்திப் பொருளாகிய கருப்புக்கட்டி ஏற்றுமதிக்கு விதித்திருக்கும் தடையை நீக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும், நெல்லை மாவட்டத்தில் மோட்டார் போக்குவரத்து சாதனத்திற்கு சில இடங்களில் டிராபிக் போர்டாரின் நிர்ணயத்திற்கு அதிகமாக பிரயாணக் கட்டணம் வசூல் செய்யப்படுவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும், இந்நகரில் பருப்பு தொழிற்சாலைகளில் தொழிலாளர்களை 10 மணி நேரம் வேலை வாங்குவதைக் கண்டித்தும், லைசன்ஸ் பெற்ற உணவு விடுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களை ஒதுக்கி உள் புக அனுமதிக்காமல் தனி பாத்திரம் வைத்திருக்கும் கொடுமை அகற்றும்படியும், நகரங்களுக்குள் இருக்கும் மதுபானக்கடைகளை நகர எல்லைக்கு வெளியே அமைக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும் நகராண்மைக்கழக வாசகசாலைகளில் இயக்கப்பத்திரிகைகளை வாங்கும்படி தூத்துக்குடி நகராண்மைக்கழக அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்வதாகவும், இயல், இசை, நாடகம் ஆகியவைகளில் சீர்திருத்த முறைகளும், முன்னேற்றக் கருத்துக்களும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

தஞ்சை மாவட்ட திராவிட மாநாடு

நிறைவேறிய தீர்மானங்கள்

தஞ்சையில் 11-7-44-ஆம் தேதி தோழர் டபுள்யு. பி. ஏ. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடந்த தஞ்சை மாவட்ட திராவிட இளைஞர் மாநாட்டில், நீதிக்கட்சியையும் தன்மதிப்பியக்கத்தையும் ஒன்றுபடுத்தி 'திராவிடர் இயக்கம்' என்று பெயரிடவேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும், பெரியார் உருவச்சிலை அமைக்கும் நிதி, சர் பன்னீர்செல்வம் நினைவுக்குறி நிதி ஆகியவற்றைத் தாராளமாக அளிக்குமாறு திராவிடர் தலைவர்களைக் கேட்டுக் கொள்வதாகவும், திராவிடநாடு தனி நாடாக அமைதல் வேண்டுமென்ற தீர்மானத்தை வலியுறுத்துவதாகவும், ஆரிய இன நலனுக்கே உபயோகமாகும்படியான விதத்திலே அமைந்துள்ள கோயில் முதலிய மத ஸ்தாபனங்களில் முடங்கிக் கிடக்கும் சொத்தை மக்கள் நலனுக்கு உபயோகமாகும்படி திட்டத்தை மாற்றியமைக்கும்படி சர்க்காரை கேட்டுக்கொள்வதாகவும்; எஸ். ஐ. ஆர்., எம். எஸ். எம். ரயில்வேக்களுக்கு 'கிரேட் டிரவிடியன் ரயில்வே' என்று பெயரிடும்படி கேட்டுக் கொள்வதாகவும், இன்றைய போரில் நேசநாட்டினர் வெற்றி பெறவேண்டுமென்று திராவிடச் சமுதாயம் விழைகிறதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மறைவு

சென்னை 11-வது வட்ட தெ. இ. ந. உ. சங்கத்தின் அமைச்சரும் சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் நிர்வாக உறுப்பினருமான தோழர் எ. முருகேசம் அவர்களின் அன்னை, தாயார் அம்மாள் அவர்கள் சில மாதங்களாக நோய்வாய்ப் பட்டிருந்து 19-7-44-ல் நாலூர் என்னும் தமது இல்லத்தில் உயிர்துறந்தார். வயது 50. யாதொரு சடங்குமின்றி அடக்கம் செய்யப்பட்டது.

வெள்ளியங்குடியில் பெரியார்

சிதம்பரம் தாலூகா வெள்ளியங்குடியில் 21-7-44-ல் பெரியார் அவர்களால் தோழர் முருகேசன் அவர்கள் செல்விக்கு 'மணிமொழி' என்ற தமிழ் பெயர் இடப்பட்டதுடன் காதணி விழாவும் நடத்தி வைக்கப்பட்டது.

இவ்விழாவிற்கு தோழர்கள் ஜனார்த்தனன், ராமச்சந்திரன், ஆளவந்தான் முதலானவர்களும் வந்திருந்து அவர்களும் தங்கள் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். பெரியார் அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். பெரியார் அவர்கள் 2½ மணி நேரம் உணர்ச்சி ததும்ப மக்கள் விழிப்புறும்படி சொற்பொழிவாற்றிவிட்டு சிறந்த கலமிக்க விருந்துண்டு உடனே மாலை 3 மணிக்கு விருத்தாசலத்திற்கு புறப்பட்டுவிட்டார். விருத்தாசலம் ரயில் நிலையத்திற்கு பெரியாரைக் காணுவதற்கு தோழர்கள் பிரியாபாய்—முனிசாமி அவர்கள் சிற்றுண்டியுடன் வந்தனர். ரயில் புறப்பட்டும் அவர்கள் வந்ததின் காரணமாக 5 நிமிஷ நேரம் நின்றது.

ஓமலூர் தாலூக்கா திராவிட இளைஞர் மாநாடு

மேற்படி மாநாடு ஜலகண்டபுரத்தில் 22-7-44-ல் தோழர் ந. அர்ச்சுனன் (பழையகோட்டை இளையருமார பட்டக்காரர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் சுந்தரம் செட்டியார் அவர்கள் இல்லத்தில் தலைவர்களனைவருக்கும் மாலையிட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். மாநாடு சரியாக காலை 10 மணிக்கு ஆரம்பமாயிற்று. ஏராளமான மக்கள், பெண்கள் உள்பட வந்திருந்தனர்.

பகுத்தறிவு பெட்டகம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து 2 மணி நேரம் வரை பாமர மக்கள் மனதில் பதியும்படி பேசினார். பின் தோழர்கள் சின்னராஜ் கொடியேற்று விழாவையும், வி. கண்ணன், வரவேற்புரையும் நிகழ்த்திய பின் தலைவர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் அரியதோர் தலைமை உரையை அழகுபட, உணர்ச்சி ததும்ப வாசித்தார். அதோடு காலை நிகழ்ச்சி முற்றுப்பெற்று மாநாடு உணவுக்காக கலைந்தது. பிற்பகல் 4 மணிக்கு தோழர் சோமசுந்தர கவுண்டர் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி பெரியார் அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டு, தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேறி மாநாடு நிகழ்ச்சி முற்றுப் பெற்றது. பின் அதே பந்தலில் பொதுக் கூட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டது. தோழர்கள் நாராயண சாமி [illegible] கதிரி செட்டியார், சின்னராஜ் முதலானவர்கள் பேசின பின் பெரியார் அவர்கள் நீண்ட கைதட்டலுக்கிடையே எழுந்து சுமார் 3 மணி நேரத்திற்கு மேல் திராவிடர் நிலைமையைப்பற்றியும், திராவிடநாட்டுப் பிரிவினை பற்றியும் தக்க ஆராய்ச்சியோடு உணர்ச்சி ததும்ப பேசினார். பின் தோழர் கண்ணன் அவர்கள் வந்தனம் கூற கூட்டம் இனிது இரவு 9 மணிக்கு கலைந்தது. பெரியார் அடுத்த நாள் காலை தாதம்பட்டிக்குச் சென்று ஒரு நாள் ஓய்வு பெற்றார்.

தாரமங்கலத்தில் தன்மான இயக்கத் தந்தை

தாரமங்கலத்தில் பிரபல தனவந்தர் தோழர்கள் அப்பு முதலியார், மாரிமுத்து முதலியார், கந்தசாமி முதலியார் ஆகியவர்களின் அரிய முயற்சியால் கட்டப்பட்ட சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தை நமது மாபெருந்தலைவர் பெரியார் அவர்கள் 24-7-44ல் திறந்து வைத்தார். காலை நிகழ்ச்சி, காலை 10 மணிக்கு ஊர்வலத்திலிருந்து ஆரம்பமாகி 2½ மணிக்கு முடிவடைந்தது. அதுவரை மக்கள் பசியோடும் பெரியாரின் உரையை செவிமடுத்தனர். தோழர் வையாபுரி முதலியார் அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி சிறப்புற நடத்திக்கொடுத்தார். மாலை பொதுக்கூட்டம் தோழர் சிவசங்கர முதலியார் தலைமையில் நடந்தது. 2000 மக்கள் குழுமியிருந்தனர். தோழர்கள் முத்துமன்னன், கனகம்மை முதலானவர்கள் தமிழ் பாடல்பாடினர். தோழர் ராஜகோபால் செட்டியார் அவர்கள் பெரியாரின் சேவையைப் பாராட்டிப் பேசி அவரது உருவப்படத்தைத் திறந்து வைத்து ரோஜாமாலை இட்டார்.

பின் பெரியார் அவர்கள் 3 மணி நேரம் வரை, நமது சமுதாய நிலைமையைப் பற்றியும், மதத்தைப்பற்றியும், திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றியும்மிக்கத் திறம்பட மக்கள் மனதை விட்டு என்றும் நீங்காதபடி அவ்வளவு உணர்ச்சியோடு பேசினார்.

பின் தோழர் கணேசசங்கர் அவர்களும் பெரியாரின் உழைப்பைப்பற்றி பேசி மக்கள் செய்யவேண்டிய கடமையை நன்றாக எடுத்துரைத்தார். பின் தலைவர் சிவசங்கர முதலியார் அவர்கள் "மக்கள் நலத்திற்காக தொண்டாற்றிய ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டும், முகமது நபி கல்லால் எறியப்பட்டும், பல துன்பங்கள் அடைந்து மறைந்தார்கள். ஆனால் நமது மாபெரும் தலைவர், தமிழரின் செல்வம் பெரியார் அவர்கள் அவ்வாறு இறக்கவேண்டியதில்லை. அவர் தன் காலம் முழுவதும் இப்படியே பேசிப்பேசித்தான் முடிவடை[illegible] [illegible]லோருமாகப் பிரார்த்தித்து வாழ்த்துங்கள்" என்று கூறினார், பின் தோழர் கண்ணன் அவர்கள் நன்றிகூற பெரியார் வாழ்க, திராவிடநாடு திராவிடருக்கே என்ற வாழ்த்தொலியுடன் இரவு 11 மணிக்குக் கூட்டம் கலைந்தது. கூட்டத்தில் ஒலிபெருக்கியும் அமைக்கப்பட்டிருந்தது.

25ந் தேதி காலை பெரியார் சேலத்தில் தோழர் சோன் அருணாசலம் வீட்டில் விருந்தினராய் இருந்து அன்று மாலை [illegible] இரவு [illegible]

சென்னை 5வது சுயமரியாதை மாநாடு

இம்மாநாடு 30-7-44 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமை வகிப்பார்.

தோழர் சி. டி. நாயகம் அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவர்.

தங்கவயல் தோழர் ஜே. சி. ஆதிமூலம் அவர்கள் கொடி உயர்த்துவார்.

சேலம் தோழர் கனகம்மையார் (சேலம் கலாசாலைத் தலைவர் தோழர் டி. ஏ. இராமசாமி எம். ஏ. எல். டி. அவர்கள் மனைவியார்) மாநாட்டைத் துவக்குவார்.

பெரியார் ஈ. வெ. ரா., சி. என். அண்ணாதுரை முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

கரூரில் சு. ம. மாநாடு

கரூர் தாலூகா சுயமரியாதை மாநாடு ஆகஸ்ட் மீ இறுதியில் (27-8-44-ல்) கரூரில் நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. வரவேற்புத் தலைவர்: தோழர் எஸ். ஏ. மயில். மாநாட்டுத் தலைவர்: தோழர் சி. என். அண்ணாதுரை. திறப்பாளர், கொடியேற்றுபவர் முதலியவர்கள் சம்மதம் பெற்றதும் தெரிவிக்கப்படும். என தோழர்கள் பி. முருகேசம், எம். கே. குகநாதன் முதலியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

சென்னையில் சந்திரோதயம்

சென்னை ஒற்றவாடை தியேட்டரில் 31-7-44 திங்கள் இரவு 9 மணிக்கு,

சந்திரோதயம்

(சமூக சீர்திருத்த நாடகம்)

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

குடி அரசு

1944-ஆம் ஜூலை-மீ 29-உ

பிரிட்டிஷாரின் தன்மை

இந்திய அரசியலைப் பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபையில் பேச்சு வரும் போதெல்லாம் சற்றேறக்குறைய இந்தியாவின் உண்மை நிலைமை விளக்கப்பட்டு வருவதை சிற்சில நாள்களாகக் காண்கின்றோம்.

அதோடு கூடவே இந்திய அரசியல் தலைவர்கள் யோக்கியதையும்கூட விளக்கப்பட்டுவிடுவதையும் காண்கின்றோம்.

இரண்டொரு மாதங்களுக்கு முன் பார்லிமெண்ட் சபையில் இந்திய அரசியல் சுதந்திரம் பற்றிய பேச்சு வந்த காலத்தில்,

“ஜாதி ஆணவம் படைத்த பார்ப்பனர்கள் கையில் சுதந்திரத்தை ஒப்புவித்தால் இந்திய பாமர மக்களுக்கு இந்த சுதந்திரம் போய் சேருமா?”

என்று ஒருவர் நன்றாய் கேட்டார். அதற்கு நம்நாட்டில் ஒரு அரசியல் தலைவராவது, ஒரு தேசியப் பத்திரிகையாவது, ஐயர், சாப்ரு, சாஸ்திரிகளாவது பதில் சொல்லவே இல்லை.

அதுபோலவே இந்தியப் பொது உடைமைக்காரர்கள் யோக்கியதையையும் பார்லிமெண்டில் ஒரு அங்கத்தினர் விளக்கிவிட்டார். அதாவது,

“ஊரார் உழைப்பில் இராஜபோகம் அனுபவித்து சிறிதும் பாடுபடாமல் வயிறுவளர்த்துக்கொண்டு திரியும் பார்ப்பனர்கள் பொது உடமைப் பேச்சு பேசுகிறார்களே இதன் அதிசயம் என்ன?” என்பதாக இந்தியா மந்திரியைக் கேட்டார்.

கடைசியாக காந்தியார் யோக்கியதையையும் சென்ற வாரம் இந்திய உதவி மந்திரி விளக்கி இருக்கிறார். அதாவது,

“காந்தியார் ஒரு கபட சன்யாசி—மோசக்காரர்” என்று சொல்லி இருக்கிறார்.

அன்றியும் காந்தியாரைப் பற்றி காந்தியாரின் “அத்யந்த நண்பரான” லின்லித்கோ பிரபுவும்,

“காந்தியார் ஜெயிலில் இருந்து தப்பி ஓடுவதற்கு பட்டினி தந்திரத்தை பயன்படுத்துகிறார். நான் ஏமாறப் போவதில்லை” என்று காந்தியாரின் நாணயத்தையே விளக்கி சொல்லி விட்டார். சர்க்கார் ரிக்கார்டுகளிலும் இதை பதிய வைத்துவிட்டு போய் விட்டார். இனியும் இப்படி பல சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அதாவது காங்கரஸ் பார்ப்பன ஆதிக்க ஸ்தாபனம் என்பதும்,

பார்ப்பனர்கள்தான் காங்கரஸ் வேஷமும் பொதுவுடமை வேஷமும் போடுகிறார்கள் என்பதும்,

காந்தியார் நல்ல ஒழுக்கமற்ற பித்தலாட்டக்கார மனிதரென்றும்,

பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரிட்டிஷ் பார்லிமெண்டும் இந்திய அரசியல் ஆதாரங்களும் அறிந்து கொண்டிருக்கின்றன.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் இந்தியாவில் இரண்டு வருஷங்களுக்குமுன் நேர்ந்த நாசவேலைகளுக்கும் பொருள் நஷ்டங்களுக்கும் உயிர் சேதங்களுக்கும் காங்கரஸ்தான் பொறுப்பாளி என்றும், இவை ஜப்பானை வரவழைக்கச் செய்யும் சதி என்றும் கூறி இந்த முடிவை இந்திய அரசாங்க நிர்வாக சபை தீர்ப்பாகவும் ஆக்கிவிடப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் பிரிட்டிஷார் இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்புக்கு காங்கரசையும் காந்தியாரையுமே சேர்த்துக் கொண்டு பேசுவது என்றால், இன்றைய நிலையில் ஹிட்லர் முசோலினியுடன் சர்ச்சில் பேச கூப்பிடுவது போன்றதல்லவா என்று கேட்பதோடு காங்கரஸ், காந்தியார் போல் நடந்து கொள்ளாத மற்ற கட்சியாரும் மக்களும் பிரிட்டிஷாருக்கு மனிதராகவே தென்படவில்லை என்பதாகவும் கருத வேண்டி இருக்கிறதா இல்லையா என்றும் கேட்கிறோம்.

இந்தியா 40 கோடிக்கு மேற்பட்ட ஜனத்தொகையைக் கொண்டதும் சுமார் 2000 மைல் நீளமும் 2000 மைல் அகலமும் கொண்ட நாடும் பல இனம், பலமதம், பலவித நாகரீகம் பல மொழிகள் கொண்ட பலஜாதிகளால் நிறையப்பட்ட நாடுமாகும். அவ்வளவு மாத்திரமல்லாமல் ஒரு மதத்திற்கு ஒரு மதம் விரோதமும், ஒரு இனத்திற்கு ஒரு இனம் வெறுப்பும், ஒரு ஜாதிக்கு ஒரு ஜாதி குரோதமும், உயர்வு தாழ்வு பேதமும் கொண்ட கொடுமை கொண்ட மக்களைக் கொண்ட நாடுமாகும்.

இப்படிப்பட்ட நாடு எந்தக்காரணத்தாலோ பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குள் ஒரு காலத்தில் சிக்கிக் கொண்டால் இந்த நிலைகளை நன்மையாய் பயன்படுத்திக் கொண்டு சுயநல சூழ்ச்சிக்காரர்களுடன் கூடிக்கொண்டு நாட்டைச் சுரண்டி மக்களை நிரந்தரமாய் அடிமைப்படுத்தி வைத்திருப்பது தான் பிரிட்டிஷ் நீதியா என்று கேட்கிறோம்.

ஒரு மனிதன் யோக்கியன் அல்ல, உண்மையானவன் அல்ல என்று தெரிந்தும்கூட ஒரு ஸ்தாபனம் பொதுமக்கள் பிரதிநிதித்துவம் கொண்ட ஸ்தாபனம் அல்ல என்று தெரிந்துகொண்ட பின்பும் கூட இந்தியாவின் (முஸ்லிம்கள் நீங்கியமுப்பது கோடி) மக்களுக்கு அந்தமனிதனும் அந்த ஸ்தாபனமும் தான் பிரதிநிதித்துவம் கொண்டவை என்று கருதப்படுமானால், இது கருதுகிறவர்களை ஒன்று நாணயக் குறைவானவர்கள் என்று சொல்லவேண்டும் அல்லது சுயநலக்கோழைகள் என்று சொல்ல வேண்டும் என்பதைத் தவிர வேறு எப்படிச் சொல்ல வழியிருக்கிறது என்று கேட்கின்றோம்.

காந்தியாரை இந்தியா உதவி மந்திரி எப்பொழுது “கபட சன்யாசி” என்று கண்டு கொண்டாரோ அப்பொழுதே இந்திய பாமர மக்கள் ஏமாந்து போய் காந்தியாரை மகாத்மாவாக மதிக்கிறார்கள் என்பதை சாதாரணமாக உணர்ந்தவராகத் தானே இருக்கவேண்டும். இந்திய மக்கள் 100க்கு 90 பேர்கள் கல்வி அறிவில்லாதவர்களென்பதோடு காட்டுமிராண்டி காலத்திய மத உணர்ச்சியும் மூட நம்பிக்கையும் கொண்டவர்கள் என்பதும் சரித்திர பூர்வமாய் பிரிட்டிஷ்மக்கள் அறிந்தே இருக்க வேண்டும். இப்படிப்பட்ட நாட்டை 200-வருட ஆண்ட பிரிட்டிஷ் மக்கள் இதுவரை யோக்கியமாய்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சேலம் மாநாடு

1944ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 4-ஆந்தேதி வெள்ளிக்கிழமை காலை 10-மணிக்கு சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதை சங்கக் கட்டிடத்தில் S. I. L. F. (ஜஸ்டிஸ் கட்சி) மாநாட்டு வரவேற்புக்கமிட்டிக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் மாநாடு சம்மந்தமான விஷயங்கள் முடிவு செய்யப்படும். அங்கத்தினர்கள் யாவரும் இதையே அழைப்பாகக்கொண்டு 4ந்தேதி வெள்ளிக்கிழமை தயவு செய்து அவசியம் வரவேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

காரியதரிசி.

ஆளாததற்கு இந்தியாவின் நிலைமையையும் இந்தியத் தலைவர்கள் யோக்கியதையையும் பார்ப்பனர்கள் தன்மையையும் தெரிந்து கொள்ளாதது தான் காரணம் என்று சொல்லுவார்களேயானால், இப்போது இவைகளையெல்லாம் தெரிந்து கொண்ட பிறகு யோக்கியமாய் தங்கள் கடமையைச் செய்யாமல் 'காங்கரசும் காந்தியும் தங்களுக்கு நேரடியாக ஒன்றும் தெரிவிக்கவில்லை' என்று இந்திய உதவி மந்திரி சொல்லி காந்தியாரையும் காங்கரசையும் பெருமைப்படுத்துவாரானால் பிரிட்டிஷார் நாணயத்தில், யோக்கியப் பொறுப்பில் யார்தான் திருப்தியடைய முடியும் என்பது விளங்கவில்லை.

தவிரவும் இந்தியாவில் உள்ள பார்ப்பனர்களின் யோக்கியதையைப் பிரிட்டிஷாருக்கு அடிக்கடி எடுத்துரைத்து விளக்கி வந்தவர்கள் தென்னாட்டாராகிய திராவிட மக்களேயாகும். இந்தியப் பார்ப்பனர்களுக்கும் திராவிட மக்களுக்கும் சரித்திரத்திற்கு முந்திய காலம் முதல் உள்ள இனப்பகைமையும் உணர்ச்சியும், பார்ப்பனர்களால் திராவிட மக்கள் தலையெடுக்க விடாதபடி பலவித சூழ்ச்சிகளால் கொடுமைப்படுத்தப்பட்டு வருவதும் சரித்திரம் கூறும் உண்மையாகும். இது பிரிட்டனில் மாத்திரமல்லாமல் உலகிலுள்ள சரித்திராசிரியர் யாவரும் உணர்ந்த உண்மையுமாகும். தென்னிந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் மூலம் சுமார் 100 வருஷத்திற்கு மேலாகவும் சிறப்பாக இந்த 30 ஆண்டுகளாகவும் பிரிட்டிஷாருக்கு இந்த தன்மைகள் நன்றாய் தெரிந்திருக்க வேண்டிய உண்மையுமாகும். இந்த நிலைமையில் பிரிட்டிஷ் ஆட்சி திராவிடர்களுக்கு உள்ள குறைபாடுகளையும், கொடுமைகளையும், இழிவுகளையும் முன்னேற்றத் தடையையும் நீக்க முயற்சிக்காமல் சும்மா இருந்து விட்டு இப்போது நிலைமை தெரிந்ததாகக் காட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்ட பின்பும், இந்த திராவிடர் நிலை சீர்பட பிரிட்டன் கவனிக்கவில்லையானால், இராஜிக்கு காந்தியையும் காங்கரசையும் கூப்பிடுமானால், பிரிட்டிஷ் ஆட்சி இராஜ்யத்தை நம்பி இருக்கிறதே ஒழிய செங்கோலை, நீதியை நம்பிக் கொண்டிருக்கவில்லை என்றுதானே பொருள்கொள்ளவேண்டியிருக்கிறது என்கிறோம்.

யுத்தம் தொடங்கி காங்கரசார் குழப்பமும், காலித்தனமும், நாசவேலையும் ஆரம்பித்த காலமுதல் இதுவரை இந்திய அரசியலைப் பற்றி பிரிட்டிஷார் பேச நேர்ந்த எந்த சந்தர்ப்பத்திலும் திராவிடர்களைப்பற்றியோ அவர்கள் ஸ்தாபனத்தைப்பற்றியோ ஒரு வார்த்தைகூட வெளிப்படையாய்ப்பேச இஷ்டப்படவில்லையானால், பிரிட்டிஷாரின் வீரம் எல்லாம் உதைக்கிறவன் காலைக்கட்டுவதில் இருக்கிறதே தவிர ஆபத்துக்கு உதவி செய்தவனை நினைப்பதில்கூட இல்லை என்றுதானே சொல்லவேண்டும். இந்தியா முழுவதிலும் தென்னாடு யுத்த நன்கொடையில், பொருள் உதவியில் முதல் இடம் கொண்டிருப்பதோடு சேனைக்கு ஆள் உதவினதிலும் முதல் இடம் கொண்டு இருக்கிறது.

காங்கிரசினுடையவும் காந்தியாரினுடையவும் குழப்பங்களை தென்னாடே அடக்க உதவி செய்து இருக்கிறது.

இப்படிப்பட்ட தென்னாடு பிரிட்டிஷாரை நியாய விரோதமாய் எவ்வித சலுகையும் கேட்கவில்லை என்பதோடு நன்றியறிதலையும் கேட்கவில்லை என்றும் வீரத்துடன் கூறுவோம். ஆனால் தென்னாடு பிரிட்டனிடம் எதிர்பார்ப்பதெல்லாம் நாணயத்தைத்தானே ஒழிய வேறல்ல.

ஏன் இப்படி எழுதுகிறோம் என்றால் மேலே குறிப்பிட்டபடி காங்கரஸ் பார்ப்பன ஸ்தாபனம் என்றும், காந்தியார் மோசகார தந்திரகார நாணயக் குறைவானவரென்றும், அடாத கேடான நாசவேலைகளுக்கு இவர்கள் இருவர்களே பொறுப்பாளிகள் என்றும் சொல்லிவிட்டு மறுபடியும் அவர்களிடமே அதுவும் மேற்கூறப்பட்ட காரியங்களில் சம்மந்தப்படாத—அவைகளை எதிர்த்து அடக்கிய மக்களுக்கு ஆகவும் அவர்களிடமே ராஜி பேசுவதென்றால், இதற்கு என்ன பெயர் கொடுப்பது என்பதை வாசகர்களே யோசித்து முடிவுசெய்து கொள்ளக் கோருகிறோம்.

மறுமலர்ச்சி

நகைச்சுவை மன்னர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், மங்கள பாலகான சபாவைத் தலைமை ஏற்று நடத்த முன்வந்ததைப் பாராட்டி மறுமலர்ச்சி வைபவம் 19-7-44 தேதி சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடந்ததைக் கண்டு நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் சினிமா உலகில் பகுத்தறிவு சம்பந்தமான கருத்துக்களைப் புகுத்திப் புரட்சி செய்து வருவது யாவரும் அறிந்ததே. இதனால் எவ்வளவு பெரிய புரட்சி ஏற்பட்டிருக்கிறது பட உலகில் என்பது மறுக்க முடியாது. இதற்கு யார் பொறுப்பாளியாகயிருந்த போதிலும் தோழர் என். எஸ். கே. அவர்களே பாராட்டுதலுக்கு உரியராவார் என்பதை நாம் தைரியமாகச் சொல்லுவோம். இதுவரை சினிமா உலகில் செய்த புரட்சி போதாதென்று நாடக உலகிலும் புரட்சி செய்ய முன்வந்து விட்டார். இந்நாட்டிலே, சிலர் வயிற்றுப்பிழைப்புக்காக நாடகக்கலையை வளர்ப்பது போலல்லாமல், மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆன முறையில் நாடகக்கலை பயன்படும்படியாக உழைக்க முன்வந்து விட்டார் நமது தோழர். அவர் இந்த நாடகக் கம்பெனியை விலைக்கு வாங்கி நடத்த முன்வந்தது நமது சொந்த விருப்

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிக் குறிப்பு

28-7-44 பகல் ஈரோட்டிலிருந்து திருச்சி வழி தென்னார்காடு மாநாட்டுக்கு பிரயாணம்.
29-7-44 தென்னார்க்காடு மாநாடு திறப்பு (கடலூர்)
30-7-44 சென்னை சுயமரியாதை மாநாட்டில் சொற்பொழிவு.
31-7-44 சென்னை ஒற்றைவாடை பந்தலில் நடக்கும் 'சந்திரோதய' நாடகத்திற்குத் தலைமை.
1-8-44 பிரயாணம்.
2-8-44 ஈரோடு.
3-8-44 சேலம் (நாதம்பட்டி)
5-8-44 ஈரோடு வருகை.

சீர்திருத்த மணமக்களுக்கு விருந்து

நன்னிலம்: சென்ற 12-7-44 பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் தலைமையில் நன்னிலத்தையடுத்த பேரளத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்ட இரண்டு திருமணத் தம்பதிகளுக்கு 19-7-44-ஆம் தேதி பேரளம் தோழர் மகாதேவ முதலியாரின் ஆப்த நண்பரும் நன்னிலம் வியாபார வரி உத்தியோகஸ்தருமான தோழர் ஆ. குமாரசாமி பி. ஏ., அவர்கள் சிறந்த முறையில் விருந்து ஒன்று நடத்தினார். இவ்விருந்தில் உள்ளூர் முக்கிய ராஜீய உத்தியோகஸ்தர்களும், நண்பர்களும், பிரபலஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

அனுதாபம்

ஈரோடு: கோவை மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பாக 26-7-44-ஆம் தேதி மேற்படி கழகத்தின் உதவி காரியதரிசி தோழர் எஸ். ஆர். சந்தானம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், மேற்படி கழகத்தின் செயலாளர் தோழர் பி. பழனிச்சாமி அவர்களின் தகப்பனாரின் அகால மரணத்திற்கு வருந்துவதாக ஒரு அனுதாபத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நிலைக்கருதியல்ல என்பதை அவர் நன்கு விளக்கி விட்டார். பிறருக்கு உதவி செய்யும் பொருட்டே அவர் அதை வாங்கியிருக்கிறார். எனவே இவருடைய தாராள சிந்தனையைப் பாராட்டுகிறோம். மற்றும், இவரது தலைமையில் இக்கம்பெனியார் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் முற்போக்குக்கும் ஆன நாடகங்களை நடித்து வருவார்கள் என்பது நிச்சயம்.

பேரளத்தில் 12-7-44 தேதி பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் திருமணம் செய்து கொண்ட தோழர் என். மகாதேவ முதலியார் அவர்களின் புதல்விகளான தோழர்கள் சகுந்தலா—குஞ்சிதபாதம்; செல்வ சுந்தரம்—சம்பந்தம் ஆகியவர்கள்.

அறிவிப்பு

நமது 'குடி அரசு' இதழை அதிகப் பக்கங்களுடன் வெளியிட, கூடுதலான காகித சப்ளை செய்யும்படியாக சர்க்காரிடம் முயற்சித்து வருகிறோம். இம்முயற்சி வெற்றி பெற்றால் 'குடி அரசு' அதிகப் பக்கங்களுடன் வெளிவரும், இல்லையேல் விலை குறைக்க நேரலாம் என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்.

அடுத்த இதழ்

திருச்சியில் 16-7-44-ஆம் தேதி நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு அடுத்த இதழில் வரும்.

கல்கத்தாவில் குமாரராஜா

கல்கத்தா: செட்டிநாட்டு குமாரராஜா சர். எம். ஏ. முத்தையர் செட்டியார் 23 ஆம் தேதியன்று கல்கத்தா வந்து சேர்ந்தார். அவர் தென்னிந்திய கைத்தறி ஜவுளி வியாபாரிகள் சங்கத்தினரைக் கண்டு கட்டுப்பாடு உத்தரவைப் பற்றி அவர்களுடன் கலந்து பேசினார். அவர் வியாபாரிகள் தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லி சர்க்காருக்கு மகஜர் அனுப்பவேண்டுமென்றும் அதன் நகலைச் சென்னையிலுள்ள தென்னிந்திய வியாபாரச் சங்கத்துக்கு அனுப்பும்படியும் யோசனை கூறினார். தாம் தம்மாலான உதவி செய்வதாகவும் உறுதி கூறினார். திங்கட்கிழமையன்று அவர் டில்லிக்குப் பிரயாணமானார்.

அறிவிப்பு

புத்தக விற்பனை

தோழர்களே! பெரியார் அவர்களது சுற்றுப்பிரயாணத்தில் 'குடி அரசு' பதிப்பக புத்தகங்கள் விற்கப்படும். அனைவரும் வாங்கிப் பயன்பெறவேண்டுகிறோம்.

மானேஜர்.

பிரபல நாதசுர வித்வான் காலமானார்

பிரபல நாதசுர வித்வான் திருவாரூர் பிரதர்ஸ் பெரியவரான எம். கண்ணப்பா பிள்ளை அவர்கள் திருவாரூர் புலிவலத்தில் தமது இல்லத்தில் சிறிது காலமாக உடல் நலிவுற்றிருந்து 15-7-44 பகல் 2 மணிக்கு காலமானார். இதையறிந்த பிரபலஸ்தர்களும், வித்வான்களும் இறங்கிவிட்டார்கள். 16-7-44-உ காலை 11 மணிக்கு பிரேத ஊர்வலம் புறப்பட்டு சுடுகாடடைந்தது. சுடுகாட்டில் புலிவலம் இன்னிசை வேளாளர் சங்கத் தலைவர் வேணுகோபால் அவர்கள் தலைமையில் ஒரு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. அதில் திருவாரூர் வி. பி. கோர்ட்டு பிரசிடெண்டு டி. என். வெங்கடப்பா, மூ. கருணாநிதி, மகாதேவன்பிள்ளை முதலியவர்கள் காலஞ்சென்ற கண்ணப்பா பிள்ளை அவர்களின் குணாதிசயங்களைப் பற்றியும், அவர் சங்கீதத் திறமைகளைப் பற்றியும், அவர் செய்த தமிழ் சாகித்தியங்களைப் பற்றியும் பேசினர். பின்னர் ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுரை அண்ணாதுரை வாசகசாலை

மதுரை: அண்ணாதுரை வாசகசாலை ஆண்டுவிழா புதனவு தோழர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. காரியதரிசி அறிக்கைக்குப்பின் தோழர்கள் லெ. சு. சண்முகம் பெரியார் படத்தையும், எ. வேணுகோபால் திராவிடநாடு படத்தையும் திறந்து வைத்தார்கள். தோழர்கள் டி. நாராயண பிள்ளை பி. ஏ., பி. எல்., கே. ஆர். சத்தியேந்திரன், முகமது ஷரீப், அ. பொன்னம்பலம் முதலியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

அண்ணாமலை நகரில் கிளர்ச்சி

திராவிட மாணவர்கள் முறையீடு

அண்ணாமலைப் பல்கலைக் கழக வைஸ்சான்சலர் தோழர் எம். ரத்தினசாமி அவர்களுக்கு டி பல்கலைக் கழக ஹாஸ்டலைச் சேர்ந்த திராவிட மாணவர்களின் சார்பாக தோழர் எஸ். கஜேந்திரன் (1 st Year Student Post-Graduate Course) மகஜரொன்று சமர்ப்பித்துள்ளார். அதில், எல்லா மாணவர்களுக்கும் பொதுவாகவுள்ள 'ஹாஸ்டல் ஆபீசி'ல் காந்தியார் படம் தொங்கவிடப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டி நீதி வழங்கும்படி கோரப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவில் திராவிடர் சமுதாயம் எவ்வாறு இன எழுச்சியுற்று திராவிடத் திருத்தந்தையின் கீழ் முரசு முழக்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

“அலிகார் பல்கலைக் கழகத்திற்கு ஜனாப் ஜின்னா விஜயம் செய்த காலையில் அக்கழக நிர்வாகிகளும் மாணவர்களும், அவரை எவ்வளவு உற்சாகத்துடன் வரவேற்றார்கள் என்பது, நாங்கள் அறியாததல்ல; காரணம் என்ன? அவர் முஸ்லிம் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் என்பதினாலன்றோ? அதுபோல, தமிழகத்தில் திராவிட நாட்டில் விளங்கும் பல்கலைக்கழகத்தில் திராவிடர் தலைவரைப் போற்றினால் குற்றமாகுமா?”

என்றும் கேட்டிருக்கின்றனர்.

தோழர் காந்தியார் படம் வடநாட்டில் ஹிந்து சர்வகலாசாலையிலோ, சாந்தினி கேதனத்திலோ அல்லது வேறு எங்கோ இருப்பதைப் பற்றி கவலையில்லையென்றும், திராவிட மாணவர்கள் குழுமியுள்ள ஒரு இடத்தில் வைத்திருப்பது தான் ஆத்திரமூட்டக்கூடியதாகயிருக்கிறதென்றும், அதிலும் திராவிடர் சமூகத்திற்கே எதிரியாக உள்ளவரின் படத்தைத் தொங்கவிட்டிருப்பதை எவ்வாறு பொறுத்துக்கொண்டிருக்க முடியும் என்றும் அதில் கேட்டிருக்கின்றனர். கடைசியாக காந்தியாரின் படத்தை அப்புறப்படுத்த கோரியிருக்கின்றனர். தொங்கவிடப்பட்டுள்ள படத்தை எவ்வாறு அகற்றுவது என்று கருதினால், பட்டமளிப்பு விழா நடக்கும் மண்டபத்திலோ அல்லது வேறு பிரதான கட்டிடத்திலோ திராவிடத்தலைவர் படத்தைத் தொங்கவிட வேண்டுமென்று கோரியிருக்கின்றனர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

இயற்றிய சிறு நாடகம்

நல்ல தீர்ப்பு

வெளிவந்து விட்டது! விலை 0-9-0.

பாரதிதாசன் இயற்றிய நூல்கள் அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்;

முல்லைப் பதிப்பகம்,
59, பிராட்வே, சென்னை.

இராசிபுரம் விவசாயிகள் மாநாடு

இராசிபுரம் அண்டு நாமக்கல் விவசாயிகள் மாநாடு வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் தோழர் என். முத்தியாலுசாமி நாயுடு அவர்கள் தலைமையில் 19-7-44 பூதன்கிழமை மாலை 6 மணிக்கு இராசிபுரம் [illegible] நாடக கொட்டகையில் நடைபெற்றது.

டி கூட்டத்தில் டி விவசாயிகள் மாநாட்டுக்கு தலைமை வகிக்க டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களை கூப்பிடுவதாகவும், திறப்புவிழாவாற்ற பெரியார் ஈ.வெ. ராவை கூப்பிடுவதென்றும், கொடியேற்று விழாவை நடத்திக் கொடுக்க பழயகோட்டை இளையகுமாரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்களைக் கூப்பிடுவதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின. வரவேற்புக் கமிட்டிக்கு தலைவராக தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களை தேர்தல் செய்யப்பட்டது. இன்னும் பல நிர்வாகஸ்தர்களையும் தேர்தல் செய்யப்பட்டது. மாநாடு 15-8-44-க்குள் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பின் நன்றி கூற கூட்டம் கலைந்தது.

விளம்பரம்

திருவாரூர் கருணாநிதி தியேட்டரில்

18-8-44ல் வெள்ளி இரவு 10-30 மணிக்கு பழையகோட்டை இளைய குமாரபட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் காஞ்சி திராவிட நடிகர் கழக தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் கோஷ்டியாரால்

சந்திரோதயம்

என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெறும்.

M. A. ஆறுமுக நாடார், முனிசிபல் கௌன்சிலர், தலைவர்.

V. பார்த்தசாரதி நாயுடு, M. துரைராஜ், உபதலைவர்கள்.

P. V. O. இராசகோபாலன், M. K. ஜம்புலிங்கம், காரியதரிசிகள்.

டிக்கட் விபரம்:— ரூ 5, 2, 0-8-0

கிடைக்குமிடம்:- 1-8-44 முதல்

P. V. O. இராசகோபாலன், காசுக் கடை, விஜயபுரம்.

கோ. அண்ணாமலை, கலப்பை மார்க் சுருட்டுக் கம்பெனி, ஆண்டார் தெரு, திருவாரூர்.

மற்றும் பல இயக்க ஞாக்கியஸ்தர்களிடமும் கிடைக்கும்.

திராவிடர் மறுமலர்ச்சி நடிகர் கழகம்

அய்யம்பேட்டை: 22-7-44-ல் தோழர் இ. ராசலிங்கம் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத்தினரின் முயற்சியால், “திராவிடர் மறுமலர்ச்சி நடிகர் கழகம்” தோழர்கள் நடராசன், ஆர். எஸ். கோவிந்தன், கே. எஸ். கோவிந்தராசன், மாரியப்பப் பாண்டியன் ஆகியவரை முறையே ஆசான், தலைவர், செயலாளர், துணை செயலாளர்களாகக் கொண்டு திறக்கப்பட்டது.

திருமணங்கள்

திருவண்ணாமலை: தோழர் டி. எஸ். மூத்துகுமாரசாமி முதலியார் அவர்களின் மகன் தோழர் சாமிராஜு பி. ஏ., அவர்களுக்கும் புதுவை ச. சு. தணிகாசல முதலியார் மகள் தோழர் ராஜேஸ்வரிக்கும் ஆரணி சைதாபேட்டை தோழர் இளையபெருமாள் முதலியார் மகன் தோழர் விஜயகங்களுக்கும் டி முத்துகுமாரசாமி முதலியார் மகள் தோழர் ராஜேஸ்வரிக்கும் திருவண்ணாமலையில் 22-6-44-ல் திருமணங்கள் நடைபெற்றன. ‘குடி அரசு’க்கு நன்கொடையாக ரூ. 5 அளிக்கப்பட்டது.

* *

பெ, த. கோளத்தூர்: 7-7-44-ல் சு. ம. முத்துசாமி உடையார் மூன்றாவது மகன் தோழர் இராமசாமிக்கும், லா. தா. கண்ணனூர் வகாம்பர உடையார் மகள் தோழர் வேலம்மாளுக்கும் மோதிரம் மாற்றுதலுடனும் கொளத்தூர் ம. பெரியதம்பி உடையார் மகன் தோழர் பொன்னுசாமிக்கும்; முத்துக் கிருஷ்ண உடையார் மகள் தோழர் மீனாம்பாளுக்கும் தாலி கட்டுதலுடனும் செருடமங்கலம் தோழர் விருத்தாசலம் பி. ஏ. ஆனர்ஸ் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றன. திருமணங்களும் சடங்குகளும் என்பதுபற்றி பலர் பேசினர். ‘திராவிட நாடு’ ‘குடி அரசு’த் தாள்களுக்கு அவைகளின் வளர்ச்சிக்காக ரூபாய் ஒன்று முறையே அனுப்பப்பட்டது.

[illegible]

நாராயண டாக்கீஸில் தாராபுரம் மேலவலசு தோழர் சிரப்பரசாமிக்கவுண்டர் அவர்கள் தலைமையில் தோழர் இராமானுசத்திற்கும், தோழர்சாவித்திரிக்கும் எவ்வித சடங்குகளின்றி வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் நடைபெற்றது. பல பெரியார்களிடமிருந்து மணமக்களை வாழ்த்தி செய்திகள் அனுப்பியிருந்ததையும், வாழ்த்துப் பாக்களையும் வாசிக்கப்பட்டது.

* *

திருநெல்வேலி ஜில்லா: இராமானுஜம்புதூரிலிருக்கும் தோழர் எஸ். ஆறுமுகம் அவர்களின் மகன் தோழர் எஸ். ஏ. அண்ணாமலை அவர்களுக்கும், ஷையூர் தோழர் பி. சுப்பையா தேசிகர் மகள் தோழர் கமலாச்சி அம்மாளுக்கும் 7-7-44-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு மணமகள் இல்லத்தில் திருமணம் இனிது நடைபெற்றது. மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

* *

தஞ்சை: தஞ்சை பில்லுக்காரத்தெருவில் தோழர் பி. வேணுகோபால் பி. ஏ., பி. எல்., தலைமையில் 12-7-44 புதனன்று தோழர் டி. வி. சுந்தரராசு அவர்களுக்கும் தோழர் அஞ்சலவல்லியம்மையாருக்கும் சுயமரியாதை முறைப்படி சீர்திருத்தத்திருமணம் நடைபெற்றது.

* *

முருங்கை களத்தூர்: 7-7-44ம் தேதி வெள்ளி காலை 9 மணிக்கு முருங்கை களத்தூரில் ஓ. மயில்வாகனன்—தெய்வானை ஆகியோர் சீர்திருத்தத் திருமணம் தோழர் வி. எம். பழனிவேல் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. 'குடி அரசு'க்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

விஜயபுரம்: அடியக்கமங்கலத்தில் தோழர் முகம்மது இப்ராகிம் அவர்களுக்கும் தோழர் ஜஹபர் நாச்சியார் அவர்களுக்கும் 5-7-44ம் தேதி திருமணம் நடைபெற்றது. பல சங்கங்களும் பல தோழர்களும் வாழ்த்திதழ்கள் வாசித்தளித்தனர். பத்திரிகைகளுக்கு நன்கொடையளிக்கப்பட்டது.

ரோஜா முத்தையா

தமிழ் நாட்டுச் செய்திகள்

கோலார்தங்கவயல்: சாம்பியன் ரீப்ஸ் சமரச செடிபூல் வகுப்பினர் கழகத்தின் மாதாந்திரக் கூட்டம் தோழர் எம். சி. துரை தலைமையில் 2-7-44-ல் நடைபெற்றது. தோழர்கள் எஸ். அருள்தாஸ், ஏ. ராஜேந்திரம் ஆகியவர்கள் காரியதரிசிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். 9-7-44-ல் கூடிய ஷை கழகக் கூட்டத்தில் தோழர் எம். கோவிந்தராஜு தகப்பனார் இயற்கையெய்தியதற்கு வருந்துவதாக அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

11-7-44ல் தூத்துக்குடி சண்முகபுரம் தோழர் பி. பூவலிங்கம் பார்பர் ஷாப் முன்னால் தோழர் எஸ். வி. ஜே. ஞானராஜ் தலைமையில் நடைபெற்ற ஓர் பொதுக்கூட்டத்தில் ஷை பார்பர் ஷாப் தோழர் பூவலிங்கம் தன் கடையில் (நாடார்களுக்கு மட்டும் முடி வெட்டப்படும்) என்றிருந்த போர்டை "திராவிட மக்கள் அனைவருக்கும் முடி வெட்டப்படும்" என்று மாற்றி திராவிட இன எழுச்சிக்கு அறிகுறியாயிருந்து வருவதைப்பாராட்டி பல தோழர்கள் பேசினார்கள்.

* *

வாளாடி: 14-7-44 காலை 8 மணிக்கு வாளாடியில் திராவிடர்கள் பொதுக் கூட்டம் தோழர் ரெத்தின மழவராயர் தலைமையில்கூடி திராவிடர் கழக நிர்வாகிகளாக தோழர் மாணிக்க நாட்டார் தலைவர், டி. என். நடராசன் காரியதரிசி, எஸ். சோமசுந்தரம் பொக்கிஷதார் மற்றும் பலர் நிர்வாகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த கழகம் காஞ்சிபுரம் திராவிடர் கழகத்துடன் சேர்ந்து வேலை செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* *

திருவாரூர்: 15-7-44-ஆம் தேதி விஜயபுரம் எல்லையம்மன் கோவில் தெருவில் முஸ்லிம் லீக் காரியதரிசி தோழர் தாவூது தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், ஷையூர் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில் கௌரவ டாக்டராக யிருந்து வரும் சாமினாதய்யரை இவ்வூரை விட்டு மாற்றி, ஏழைகளின் பேரில் அன்பாக நடந்து கொள்ளக் கூடிய முறையில் ஒரு சம்பள டாக்டர் நியமிக்கப்படவேணுமென்று அரசாங்கத்தாரை இக் கூட்டம் கேட்டுக்கொள்வதாகவும் இன்னும் மூன்று தீர்மானங்களும் நிறைவேறின.

* *

நாகை: 17-7-44-ஆம் தேதி நடைபெற்ற திராவிடர் கழகக் கூட்டத்தில் தோழர் கே. பால், கருணாநிதி, பி. வி. சின்னராசு ஆகியவர்கள் பேசினார்கள்.

திருச்செந்தூர்: குலசேகரப்பட்டணம் முருகாநந்த சபை நிலையத்தில் 15-7-44-ஆம் தேதி தோழர் வீ. குமாரவேலு பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள "சங்கீத சிரோன்மணி" என்ற பட்டத்திற்குரிய பாடத்திட்டத்தில் 100க்கு 97 தெலுங்குப் பாட்டும், 3 பங்கு தமிழ்ப் பாட்டுமாக இருப்பது தமிழிசையினைப் புறக்கணிப்பதாக இருக்கின்றதாகலின், இப்பொதுக் கூட்டம் பெரிதும் வருந்துவதுடன், சென்னைப் பல்கலைக் கழகம் தமிழர்களுக்கும் பொதுவாகலின் முழுவதும் தமிழ்ப் பாடல்களே கொண்டதோர் திட்டம் ஏற்படுத்தி "இசைப் புலவர்" என்ற பட்டத்தை வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது என்ற தீர்மானம் நிறைவேறியது.

* *

தூத்துக்குடி: அருந்ததியார் சமூக சீர்திருத்த சங்கத்தின் சார்பாக நந்தகோபாலபுரம் அருந்ததியார் காலனியில் தோழர் திருஞானமுத்து அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

* *

மதுரை: 16-7-44-ல் நடைபெற்ற மதுரை நாடார் மகாஜன சங்கக் கூட்டத்தில் கீழ்க்கண்ட விகிதப்படி 1944-45-ஆம் வருடத்திற்கு ஸ்காலர் ஷிப், ஸ்கூல் பிராண்டு கொடுக்கப்பட்டது.

			ரூ. அ. பை.
பி. ஏ. ஆனர்ஸ்	நபர்	1க்கு	113—10—0
பி. ஏ.	நபர்	21க்கு	2386—2—0
எப். ஏ.	,,	26க்கு	2340—0—0
ஹைஸ்கூல்	,,	13க்கு	546—0—0
டிரயினிங்	,,	6க்கு	168—0—0
கீழ் வகுப்பு	,,	1க்கு	22—0—0
பாடசாலைகள்		22க்கு	936—0—0
ஆக.			ரூ. 6511—12—0

ஆக மாணவர்கள் 68 பேரும், பாடசாலைகள் 22-ம் 1944-45-ஆம் வருடத்திற்கு பண உதவி பெறுகிறார்கள்.

* *

துறையூர் அச்சுத்தொழிலாளர் சங்கத்தின் முதலாவது பொதுக்கூட்டம் 23-7-44 ஆம்தேதி மாலை 7 மணிக்கு துறையூர் செங்குந்தர் பாடசாலையில் தோழர் சுந்தரேசன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. தோழர் ஏ. வி. ஆர். கிருஷ்ணசாமி ரெட்டியார் சங்கத்தின் அவசியத்தைப்பற்றிப் பேசினார்.

Edited Printed and Published by N Karivaradaswamy at the [illegible] [illegible]